> “...எனக்குக் கவனமாய்ச் செவிகொடுங்கள், நல்லுணவை உண்ணுங்கள்”
>
> – எசாஸ் 55:2

அவர்களது உள்ளத்தையும் மனதையும் ஆவியையும் ஆன்மாவையும் தமது போதனையால் நிரப்புகிறார். பொழுது சாயும் போது, ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் வைத்துக் கொண்டு அவர்களது வயிற்றுப் பசியைப் புதுமையாகப் போக்குகிறார். இந்த புதுமை நிகழ்வு, உலகத்தைப் படைத்த கடவுளால் நமது ஒவ்வொரு தேவைக்கும் வேண்டிய உணவளிப்பார் என்றும் நமது உடல் தேவைக்கும் உணவளிப்பார் என்றும் இன்னும் முக்கியமாக, இறைவார்த்தை இன்றளவும் வெளிப்படுத்தி வரும் நமது ஆன்மீகத் தேவைக்கும் உணவளிப்பார் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

எல்லாக் காலக்கட்டத்திலும் செயல்பட்டு வரும் திருஅவை இங்கு படம் பிடித்துக் காட்டப்படுகிறது. கலிலேயா கடற்கரையில் அந்த மக்கள் கூட்டத்திற்கு தாமே உணவளித்தார் இயேசு. யாராவது அந்த பசி பிரச்னையைப் பார்த்துக் கொள்ளட்டும் என கை கழுவிட நினைத்த அவரது சீடர்கள், மக்கள் கூட்டத்தை அனுப்பி விட தீர்மானித்தனர். ஏனென்றால் அவர்களின் பசிக்குப் பொறுப்பேற்க அவர்கள் தயாராகயில்லை. ஆயினும் தமது சீடர்களின் உதவியோடு அவர்களின் பசியை இயேசு போக்குகிறார். தங்களிடம் இருப்பதை வைத்து நல்லதைச் செய்வோம் என இயேசு கூறியதும், அங்கே ஒரு சிறுவன் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வைத்திருப்பது அவர்களின் நினைவுக்கு வருகிறது. தங்களது பாத்திரத்தில் இருந்த ஐந்து அப்பமும் இரண்டு மீனும் இயேசுவின் கைப்பட்டதும் அட்சயப் பாத்திரமாக மாறியது. அள்ள-அள்ள குறையவில்லை; அனைவரும் போதுமளவுக்கு உண்டனர்.

நம்மிடம் இருக்கும் திறமையையும் கொடையையும் அன்போடு வழங்கும்படி நம் ஒவ்வொருவருக்கும் இயேசு பணிக்கிறார். நல்லது குவிந்திருக்கும் நம் அனைவரிடமும் அதனைப் பிறருக்கு கொடுக்கும் ஆற்றலை வழங்கும் சின்னமாக இருப்பது, இந்த ஐந்து அப்பமும் இரண்டு மீனும். அந்த ஆற்றலைப் பயன்படுத்த நாம் அனைவரும் தயாரா? சிந்திப்போம்! இறையரசின் மாட்சிக்காக ஆண்டவர் நமக்கு வழங்கியுள்ள திறனைப் பயன்படுத்த வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். உங்களிடம் எவ்வளவு திறமையும் ஆற்றலும் உள்ளது!

மற்றவர்களின் தேவையைப் பூர்த்திச் செய்ய எம்மாதிரியான வகையில் பணி செய்தாலும், கிறிஸ்துவின் பரிவிரக்கத்தையும் நட்புறவையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்களுக்கு நம்மால் முடிந்ததைச் செய்வதில், இயேசுவின் சவாலை ஏற்றுக் கொள்வோம். சீடர்களிடமிருந்து ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஏற்றுக்கொண்ட இயேசு நமது திறனையும் கொடையும் ஏற்று, அதற்கு எண்ணில்லா மதிப்பைக் கூட்டுவார். நாம் பார்க்கும் போது நமது முயற்சிகள் சிறியதாக இருக்கலாம். ஆனால் கடவுளின் கையில் வைக்கும் போதும் அவரது திட்டத்தோடு பொருந்தும் போதும், அவை திருஅவையின் மாபெரும் மீட்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாறும். நமது வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் இருக்கும்.

ஐந்து அப்பம் இரண்டு மீன் புதுமை நமது வாழ்விலும் இயேசு நிகழ்த்த நாம் தயாரா? சிந்திக்கும் தருணம் இது. †

### இன்றைய வாசகங்கள்:

எசா. 55:1-3;

திபா. 144: 8-9, 15-16, 17-18;

உரோ. 8:35, 37-39;

மத். 14:13-21.

### வாரம் ஒரு வசனம்

இயேசுவின் சவாலை ஏற்றுக் கொள்வோம்

INTERNAL CIRCULATION ONLY
BUL 31/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

2 ஆகஸ்ட்டு 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 18ம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு



## உங்கள் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எவ்வாறு பயன்படுத்தப் போகிறீர்கள்?

திருமுழுக்கு யோவானின் இறப்பைக் கேள்வியுற்று, மனமொடிந்துபோன இயேசுவுக்கு சீடர்களுடன் தமது சோகத்தைப் போக்கிக் கொள்ள தனிமையான இடம் தேவைப்பட்டது. ஆயினும் அவர் கரையைச் சேர்ந்த போது அவரது போதனைக்காகவும் குணமளிப்புக்காகவும் ஆயிரக்கணக்கான மக்கள் அவரைத் தேடிக் காத்துக் கொண்டிருந்தனர்.



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 ஆகஸ்டு (ஆவணி) மாதத்தின் கருப்பொருள்:*
***ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு***

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 9.00 - மாலை 5.30
சனி: காலை 9.00 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்</u>: பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு 01 – 02 ஆகஸ்டு 2020**
எசா 55: 1-3 தி.பா: 145: 8-9, 15-16, 17-18 உரோ 8: 35, 37-39 மத்தேயு 14: 13-21
**"ஆண்டவரே எல்லா உயிரினங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்றீர்.!**

**நிரந்த குடியுரிமை மற்றும் வெளி நாட்டுதொழிலாள சகோதர சகோதரிகளே! அரசாங்கத்தின் வழிமுறைப்படி மறு அறிவிப்பு வரும் வரை, நீங்கள் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்துகொள்ள இயலாது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

அடுத்த வாரத்தில் இருந்து (ஆகஸ்ட் 2020) திருப்பலிகளில் பங்கெடுக்க விருப்பமுள்ள பங்கு மக்கள் இனி உங்கள் அதிச மற்றும் சோன் பொறுப்பாளர்களிடம் உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு திருப்பலியிலும் 380 பேர் மட்டுமே பங்கெடுக்க முடியும். அனைத்துப் பெயர்களும் பங்கு அலுவலகத்தில் வியாழக்கிழமை அன்று ஒப்படைக்கப்பட வேண்டும்.

02-08-2020( தமிழ்) காலை 8.00 மணி காலை 11.00 (ஆங்கிலம்)
திருப்பலிகளின் நேரங்கள் அவ்வப்போது மாற்றம் பெறும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அதே நேரத்தில் ஆலயத்தின் திருப்பலிகள் நேரடியாக இணையத்தின்வழி ஒளிப் பரப்பப்படும்.
***:<u>http://live.visitationseremban.org</u>***

குறிப்பு:

1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். தயவு செய்து உங்களுக்கான முகக்கவசத்தை உடன் கொண்டு வரவும்.
2) ஆலயத்திற்கு திருப்பலி தொடங்குவதற்கு ஒன்றரை மணி (1 1/2 ) நேரத்திற்கு முன்னதாக வர வேண்டும். பதிவு மற்றும் இதர தயாரிப்புகள் செய்வதற்கு இது தேவைப்படுகிறது.

**<u>நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)</u>**
1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
3) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
4) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
5) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
6) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
7) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
8) தொடுதல்/ அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
9) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
10) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலயவளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 26 ஜுலை) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 45,616.00** | **RM 21,888.00** | **RM 10005.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பென்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**
serembanvisitation@gmail.com

- **<u>உறுதிபூசுதல் அருளடையாளக் கொண்டாட்டத் திருப்பலி</u>**
  ஆகஸ்ட் 30, 2020 ( சனிக்கிழமை) பகல் 2.00 மணி
  உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான மறைக்கல்வி வகுப்புகள் 26-07-2020 ( ஞாயிறு) முதல் நடைபெறும்.
  **<u>வகுப்புகள் நடைபெறும் கால அட்டவணை:</u>**
  ஆங்கிலம்: காலை 8.00 - 9.30
  தமிழ் காலை 9.45 - 11.15
  மாண்டரின்: காலை 11.30 - 1.00 (பகல்) வரை
  **<u>வகுப்பறை: ஆலய மண்டபத்தின் மேல்மாடி அறை.</u>**
  அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளும் கண்டிப்பாக பின்பற்றப் பட வேண்டும்
  **உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான ஒப்புரவு அருளடையாளர் கொண்டாட்டம் மற்றும் குருவானவரோடு சந்திப்பு:**
  **ஆகஸ்ட் 22, 2020 (வெள்ளி) திருப்பலிக்கான ஒத்திகை: ஆகஸ்ட் 26, 2020**
- **தியான அறை** - எவ்வாறு இந்த அறை தயாராகிறது என்பதை பங்கு முக நூல் மற்றும் இணையத்தின்வழி காணவும்.
- **பங்கின் அனைத்துப் பணிக்குழுக்களின்** தலைமைத்துவமும் மாற்றம் காணவுள்ளது

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**

1) பா சமராதி பாபன்ஹமி- இறப்பு: 26/7/20
2) அகஸ்டின் வில்லியம் டி சோசா - இறப்பு: 26/7/20

**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

- **<u>குழந்தைகளுக்கான திருமுழுக்கு</u>:** பெற்றோர் ஞானப்பெற்றோருக்கான முன் தயாரிப்பு (அனைத்து மொழிகள்) 01-08-2020 (சனிக்கிழமை) **தமிழ்:** 08-08-2020 மாலை 7.00 மணி / **ஆங்கிலம்:** 15-08-2020 மாலை 7.00 மணி
  **தேசியமொழி / மாண்டரின்** 22-08-2020 மாலை 7.00 மணி இதுவரை உங்கள் குழந்தைகளின் பெயர்களைப் பதிந்துகொள்ளாதவர்கள் உடனடியாக பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

அன்பு பங்கு மக்களே! பங்கின் மனித வள மேம்பாட்டுப் பணிக்குழுவின் உணவு வங்கிக்கு நீங்கள் கொடுத்து வரும் மகத்தான ஆதரவுக்கு நன்றி. நீங்கள் கொடுக்கும் உணவுப்பொருட்களின் பொட்டலத்தை உள்ளபடியே கொடுக்கவும். நீங்கள் அதை மறுபடியும் கட்டவேண்டாம். உங்களின் ஆதரவைத் தொடர்ந்து தாருங்கள்.